III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.34/2014

Deposition of witness for the Defendant/DW2
Respondent solemnly by Thiru. A. Nagarajan Assistant
in accordance with the provision of Act I for 1873 on 11-01-2021

| | | | |
|---|---|---|---|
| Name | :Dinakar | Caste | : |
| Father's/Husband's Name | :Govindasamy | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-** இந்த வழக்கில் எதிர் வழக்குரையை நானும் என் தாயார் மற்றும் சகோதரர் ஆகியோர் சொன்ன தகவலின் பேரில் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். எங்களுடைய எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். என்னுடைய தகப்பனார் என்ன படித்திருந்தார் என்ற விவரம் எனக்கு சரியாக தெரியாது. ஆனால் எனது தந்தை படித்திருக்கிறார். பக்தவச்சலு மூத்தவர். எனது தந்தை இளையவர். ராமமூர்த்தி, தாமோதரன், பக்தவச்சலு மற்றும் எனது தந்தை ஆகியோருக்கிடையில் ஒருவொருக்கொருவர் 2 வருட வயது வித்தியாசம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தைக்கு 1981 அல்லது 1982 வருடத்தில் திருமணம் நடந்தது. குறிப்பாக 23/09/1982 தேதியில் எனது தந்தைக்கு திருமணம் நடந்ததாக சொன்னால் எனக்கு சரியாக தெரியவில்லை. சுப்பையாநாயுடுவின் மனைவி சாரதம்மாள் என்பவரை எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் சாரதம்மாளை தெரியும் என்று கூறுகிறார். சுப்பையாநயுடு மற்றும் சாரதம்மாளுக்கு 4 ஆண்பிள்ளைகள் மற்றும் ஒரு பெண் பிள்ளை ஆகும். பெண் பிள்ளையின் பெயர் வனஜா ஆகும். மேற்சொன்ன வனஜா என்னுடைய அத்தை என்றால் சரிதான். சாரதம்மாள் இறந்த சமயத்தில் என்னுடைய தந்தைக்கும் பெரியப்பா பக்தவச்சலுக்கும் திருமணம் நடக்கவில்லை. மற்றவர்களுக்கு திருமணம் நடந்ததா என்று எனக்கு தெரியாது. சுப்பையாநாயுடுவின் மனைவி சாரதம்மாள் இறந்த பின்னர் சுப்பையாவை அவரது

சகோதரரிகளில் ஒருவர் உடனிருந்து கவனித்துக் கொண்டதாக சொன்னார்கள். எனது தந்தையும் பெரியப்பா பக்தவச்சலும் அவர்களது திருமணத்திற்கு முன்னரும், சாரதம்மாள் இறந்த பின்னரும் அவர்களது பெரியம்மாவான ஒரு தனம்மாள் என்பவருடைய வீட்டில் வசித்த வந்தார்கள். மேற்சொன்ன தனம்மாள் எனது அப்பாவையும், பெரியப்பா பக்தவச்சலுவையும் தத்தெடுக்கவில்லை. தனம்மாள் வீட்டில் வசிக்கும் போது எனது தந்தையின் வயது என்னவென்று தெரியாது. சாரதம்மாள் இறந்த போது என் தந்தையின் வயது என்னவென்று எனக்கு தெரியாது. 2007ம் வருடம் வரை சுப்பையாநாயுடுவின் 4 பிள்ளைகளும் மருமகள்களும் எல்லோரும் ஒரே குடும்பமாக வசித்து வந்ததாகவும், அதற்கு பின்னர் தனித்தனியாக பிரிந்துவிட்டதாகவும் சொன்னால் சரியல்ல. பக்தவச்சலு அவருடைய பெரியப்பா மகனான பாபுநாயுடு என்பவருடன் சேம்பரை கவனித்துக் கொண்டார். மேலும் தனியாக லாரிகள் வைத்து ஓட்டி வந்தார். இந்த விவரம் 1979ம் வருடத்திற்கு முந்தையதாகும். இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய பிறந்த தேதி 04/05/1986 ஆகும். நான் ஏற்கனவே கூறிய விவரங்கள் அனைத்தும் நான் பிறப்பதற்கு முன்பே நடந்தவைகள் என்றாலும், அந்த விவரங்கள் என்னுடைய தந்தை மற்றும் தாயார் சொன்னதின் பேரில் கேள்விபட்ட விவரங்கள் என்றாலும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். 7வது பிரதிவாதி என்னுடைய தாயார் என்றாலும் அவர் தற்போது ஆரோக்கியாக இருக்கிறார் என்றாலும் சரிதான். என்னுடைய தாயார் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.45 குடும்ப அட்டை 2005ம் வருடத்திற்கு பிற்பட்டது என்றால் சரிதான். என்னுடைய குடும்ப விஷயங்கள் முதல் வாதி சுலோச்சனா, முதல் பிரதிவாதி விஜயா, 4வது பிரதிவாதி சாந்தி மற்றும் 7வது பிரதிவாதி சுகந்தி ஆகியோர்களுக்கு குடும்ப விஷயங்கள் தெரியும் என்றால் சரிதான். மேற்சொன்ன நால்வரும் திருமணம் செய்து கொண்டு வந்த பின்பு சொத்துக்கள் யார் யாரால் எப்போது வாங்கப்பட்டது என்ற விவரம் அவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். வெங்கடசாமி நாயுடுவிற்கு 2 மகன்கள் என்றாலும், அவர்களில் சுப்பையாநாயுடு ஒருவர் ஆதிநாராயணசாமி நாயுடு மற்றொருவர் என்றால் சரிதான். ஆதிநாராயணசாமி நாயுடுவின் மகன் தான் பாபு நாயுடு என்றால் சரிதான். 29/05/1958 ம் வருடத்தில் சுப்பையாநாயுடுவின் பாபு நாயுடுவும் ஏற்படுத்திக் கொண்ட பாகப் பிரிவினை

- -

ஆவணம் தான் வா.சா.ஆ.29 என்றால் சரிதான். வா.சா.ஆ.29 பாகப் பிரிவினை ஆவணமானது ஏற்கனவே 03/08/1944 தேதியில் ஏற்பட்ட கூறுசீட்டின் அடிப்படையில் ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.29 பாகப் பிரிவினை ஆவணத்தின்படி சுப்பையாநாயுடு மற்றும் ஆதிநாராயணசாமி நாயுடு ஆகியோர் சம்பாதித்த சொத்துக்களை பொருத்து பாகம் பிரித்துக் கொண்டார்கள். வா.சா.ஆ.29 ஆவணத்தில் பாகப் பிரிவினை உட்படுத்தப்பட்ட சொத்துக்கள் மூதாதையரின் சொத்துக்கள் (பிதுராஜித சொத்துக்கள்) என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.29 ஆவணம் சரியானதாகும். வா.சா.ஆ.29 ஆவணத்தின் 'அ' பட்டியல் சொத்தில் அயனம்பாக்கம் கிராமம் சர்வே எண்கள் 664/3, 663/1, 644/2, 684/1, 685/1, 685/2 ஆகிய சொத்துக்களும், பெருமாள் அகரம் கிராமத்தில் சர்வே எண்கள் 77/1, 77/2, 62/1, 69/4, மற்றும் 74/1 ஆகிய சொத்துக்களும் குறிப்பிடப்பட்டிருக்கறது என்றால் சரிதான். வா.சா.ஆ.29 ஆவணத்தின்படி மேற்சொன்ன சர்வே எண்களில் கண்ட 'அ' பட்டிகை சொத்து சுப்பயைாநாயுடுவிற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.29 ஆவணத்தில் கண்ட 'அ' பட்டிகை சொத்துக்கள் சுப்பையாநாயுடுவின் ஆரம்ப கால சொத்துக்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.29 ஆவணத்தின் மூலம் கிடைத்த சொத்துக்கள் சுப்பையாநாயுடுவால் சுயசம்பாத்தியமாக சம்பாதிக்கப்பட்ட சொத்தக்கள் அல்ல என்றால் தவறு. வா.சா.ஆ.29 ஆவணம் ஏற்பட்ட காலத்தில் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற நிறுவனம் இல்லை என்றால் சரிதான். வாசா.ஆ.29 ஆவணத்திற்கு பின்னிட்டு அதன் 'அ' பட்டிகை சொத்தில் அயனம்பாக்கம் கிராமத்தில் 1960ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்டது தான் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்றால் சரிதான். வா.சா.ஆ.29 ஆவணத்தின்படி தான் இந்த வழக்கின் 'டி' பட்டிகை சொத்தில் 2வதாக கண்ட சர்வே எண் 74/1 ன் விஸ்தீரணம் 16 சென்ட் சுப்பையாநாயுடுவிற்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். மேற்சொன்ன 16 சென்ட் விஸ்தீரணத்தை 1967ம் வருடத்தில் சுப்பையாநாயுடு ஒரு பதிவு பெற்ற ஆவண எண் 2378/1967 மூலம் பாபுநாயுடுவிற்கு கிரையம் கொடுத்துவிட்டார். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாபுநாயுடுவின் குமாரர் கிருஷ்ணகுமார் என்பவருடன் சோந்து விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திலிருந்த பல லட்சம் செங்கற்களை நான் விற்று பயனடைந்ததால் தான் சர்வே எண் 74/1ல் எங்களுக்கு இருந்த உரிமையை விட்டுக்

கொடுத்திருக்கிறோம் என்றால் சரியல்ல. விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தில் கோபால் வந்து தகராறு செய்ததாக நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். செங்கற்களை விற்கக்கூடாது என்று கோபால் தகராறு செய்ததால் தான் புகார் கொடுத்தேன். வா.சா.ஆ.49 ஆவணத்தின்படி தாவா'ஏ' பட்டிகை சொத்தில் வரிசை எண் 7 சர்வே எண் 644/1 ல் உள்ள 0.67 சென்ட் விஸ்தீரணம் பட்டா எண் 240ல் சுப்பையாநாயுடு பெயரில் பதிவாகியிருக்கிறது என்றால் சரிதான். மேற்சொன்ன சர்வே எண் 644/1 எங்களுக்கு சம்பந்தப்பட்ட சொத்து இல்லை என்றால் சரிதான். இந்த சொத்தில் வாதிகள் பாகம் பெறுவது எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் பாபு நாயுடுவால் சுப்பையா நாயுடுவிற்கு எழுதிக் கொடுக்கப்பட்ட விடுதலை ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட விவரங்களின்படி 20/06/1970 தேதியில் பாபுநாயுடுவும் சுப்பையா நாயுடுவும் தங்களது கூட்டுவியாபாரத்தை முறித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் வா.சா.ஆ.1 விடுதலை ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 1960 வருடம் முதல் 20/06/1970 தேதி வரை சுப்பையாநாயுடுவும் பாபு நாயுடுவும் தான் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தில் பங்குதாரர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். எங்களுடைய எதிர் வழக்குரையில் பத்தி 3ல் குறிப்பிட்டவாறு தாவா 'ஏ' பட்டியல் வரிசை 13 மற்றும் 14 மற்றும் 'டி' பட்டியலில் கண்ட வரிசை எண் 5 ஆகிய சொத்துக்கள் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் பெயரில் கிரையம் பெறப்பட்டதாக ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன 3 சொத்துக்களும் எந்தெந்த தேதிகளில் கிரையம் பெறப்பட்டது என்று நினைவில்லை. ஆனால் அதற்கான ஆவணங்கள் இருக்கிறது. 1960 முதல் 23/06/1978 தேதி வரை விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தில் சுப்பையாநாயுடுவின் பிள்ளைகளுக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரிதான். 20/06/1972 முதல் 23/06/1979 தேதி வரை விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தின் தனிப்பட்ட உரிமையாளராக சுப்பையாநாயுடு இருந்து வந்தார் என்றால் சரிதான். 01/04/1979 தேதியில் சுப்பையாநாயுடுவின் பிள்ளைகளான பக்தவச்சலு மற்றும் கோவிந்தசாமி ஆகியோரையும், ராமமூர்த்தியின் மனைவி விஜயா மற்றும் தாமோதரன் மனைவி சுலோச்சனா ஆகியோரையும் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தில் பங்குதாரர்களாக இணைத்துக்

கொண்டார் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தின்படி சுப்பையாநாயுடு தான் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தின்படி இணைக்கப்பட்ட புதிய பங்குதாரர்களுக்கு மாத ஊதியம் ரூ.300/- நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பங்குதாரர்கள் அனைவரும் தலா ரூ.300/- க்கு மிகாமல் ஒவ்வொரு மாதமும் நிறுவனத்திலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த வாசகம் நிர்வாக பங்குதாரருக்கு பொருந்தாது என்றால் தவறாகும். அந்த ஆவணத்தின்படி நிர்வாக பங்குதாரர் தன்னுடைய முழு நேரத்தையும் செலவிட்டு நிறுவனத்தின் நன்மைக்காகவும் பங்குதாரர்களின் நன்மைக்காகவும் பணிபுரிய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதாக சொன்னால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தின்படி நிறுவனத்தின் வங்கிக் கணக்கை நிர்வாக பங்குதாரர் தான் பராமரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதாக சொன்னால் சரிதான். நிர்வாகத்தின் சார்பாக வியாபாரத்தில் ஈடுபடுவதும் அதற்கான கடன் பெறுவதும் நிர்வாக பங்குதாரர்களின் உரிமை என்று குறிப்பிட்டிருப்பதாக சொன்னால் சரிதான். விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனம் சார்பாக பங்குதாரர்கள் யாரும் தனிப்பட்ட முறையில் கடன் பெறுவதும் மற்றும் நிறுவனத்திற்கு எதிராக செயல்படுவதும் கூடாது என்று குறிப்பிடப்பட்டிருப்பதாக சொன்னால் சரிதான். பங்குதாரர்கள் நிறுவனத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படக்கூடாது என்ற நிபந்தனை பி.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. பிள்ளைகளுக்கு எந்த வருவாயும் இல்லை என்ற காரணத்தால் தான் சுப்பையாநாயுடு தன்னுடைய நிறுவனத்தில் பிள்ளைகளை பங்குதாரர்களாக இணைத்துக் கொண்டார் என்றால் தவறாகும். மேற்சொன்ன பங்குதாரர் ஆவணம் கணக்கு காட்டும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது என்றாலும், அதனால்தான் அது பதிவு செய்யப்படவில்லை என்றாலும் தவறாகும். பி.சா.ஆ.1 ஆவணத்தின்படி 01/04/1979 முதல் அவர் காலமான 16/07/1993 தேதி வரை சுப்பையாநாயுடு தான் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரராக இருந்து வந்தார் என்றால் சரிதான். பங்குதாரர்கள் பெற்றுக் கொள்ளும் தொகை அதிகபட்சமாக ரூ.500/- என்று பி.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். 01/04/1979 முதல் 17/04/1992 தேதி வரை பங்குதாரர்கள் மாதம் ரூ.300/- வரை பெற்று வந்தார்கள் என்றால் சரிதான். மேலும் கூடுதல்

தொகையாக ஒவ்வொரு வருடமும் பங்குதாரர்கள் எவ்வளவு தொகை நிறுவனத்திலிருந்து பெற்றார்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.வருமான வரி செலுத்தியதற்கான ஆவணங்களிலும் வருடத்திற்கு ரூ.3,600/- க்கு அதிகமாக பங்குதாரர்கள் யாரும் பெற்றதாக குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் ஆவணங்கள் பார்த்தால் தான் தெரியும். எல்லோரும் கூட்டுக் குடும்பதாக இருந்ததால் சுப்பையா நாயுடு தான் எல்லோருடைய தேவைகளையும் கல்வி, சாப்பாடு உட்பட கவனித்துக் கொண்டார் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.20 மற்றும் 21 ஆகியவை வருமான வரி அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டதற்கான அத்தாட்சி எதுவும் இல்லை என்றாலும், அது பட்டயக் கணக்காயர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்ட ஒரு படிவம் என்றால் சரிதான். அவற்றில்பட்டயக் கணக்காயரின் கையெழுத்துக்களும் இடம் பெறவில்லை என்றால் சரிதான். 1979ம் வருடத்தில் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தில் பங்குதாரர்களாக சேர்க்கப்பட்ட போது புதிய பங்குதாரர்கள் நிறுவனத்தில் முதலீடு செய்ததற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ட 'எப்' பட்டிகை சொத்தை பி.சா.ஆ. 7 மற்றும் 8 ஆகிய ஆவணங்களின் மூலம் அடமானம் ஏற்படுத்தி 13/11/1997 தேதியில் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தில் முதலீடு செய்ததாக பி.சா.ஆ.37 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். தாவா 'ஏ' பட்டிகையில் கண்ட ஒரு பகுதி சொத்து 3.77 ஏக்கர் விஸ்தீரணத்தை வா.சா.ஆ. 3 ஆவணத்தின் மூலமும், தாவா 'எப்' பட்டிகை சொத்தை வா.சா.ஆ.34 மற்றும் 35 ஆகிய ஆவணங்களின் மூலமும் சுப்பையாநாயுடுவின் 4 பிள்ளைகளும் தங்களின் சொந்த வருவாயை கொண்டு கிரையம் பெற்றதாகவும் மற்றும் தாவா 'பி' மற்றும் 'சி' பட்டிகை சொத்தக்களை பக்தவச்சலு மற்றும் கோவிந்தசாமீ ஆகியோர் தங்களுடைய தனிப்பட்ட வருவாயை கொண்டு கிரையம் பெற்றதாகவும், தாவா 'ஜி' பட்டிகை சொத்தை கோவிந்தசாமி தன்னுடைய தனிப்பட்ட வருவாயை கொண்டு கிரையம் பெற்றதாகவும் எங்களுடைய எதிர் வழக்குரையில் குறிப்பிட்டிருக்கிறோம் என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்துக்களை கிரையம் பெறுவதற்கு சுப்பையாநாயுடுவின் பிள்ளைகளுக்கு போதிய வருவாய் இருந்தது. மேற்சொன்ன சொத்துக்களை கிரையம் பெற்றது சுப்பையாநாயுடு முதலீடு எதுவும் கிடையாது. மேற்சொன்ன சொத்துக்களை கிரையம் பெற்ற சமயத்தில்

சுப்பையாநாயுடுவின் பிள்ளைகள் என்ன வேலை செய்து வந்தார்கள் என்றும், அவர்களுடைய வருமானம் என்ன என்பது பற்றியும் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வருமான வரி செலுத்தியதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறோம்.பி.சா.ஆ.35 ஆவணத்தின்படி 1975-1976 மற்றும் அதற்கு முந்தைய 5 ஆண்டுகள் காலத்திற்கு என்னுடைய தந்தையின் மொத்த வருவாய் ரூ.15,000/- என்று குறிப்பிடப்பட்டிருப்பதாக சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் சுப்பையாநாயுடுவின் பிள்ளைகள் 4 பேரும் சேர்ந்து தாவா 'ஏ' பட்டியல் சொத்தில் 8 முதல் 11 மற்றும் 16 இன சொத்துக்களை 04/03/1974 தேதியில் கிரையம் வாங்கியிருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் பாபுநாயுடுவின் சேம்பரை எனது தந்தை கவனித்து வந்தார். மேலும் தனியாக டிரான்ஸ்போர்ட் நடத்தி வந்தார். அமைந்தகரை சொத்திலிருந்து வாடகை வருவாயும் வந்தது. எனதுதந்தை பெயரில் 2 லாரிகள் இருந்தது. எனது தந்தைக்கு சொந்தமான 2 லாரிகள் கிருஷ்ணகுமார் லாரி சர்வீஸஸ் என்ற பெயரில் இருந்தது. வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி அந்த ஆவண தேதியில் எனது தந்தை 17 வயதுடைய இளவர் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவண தேதியில் எனது தந்தைக்கு 21 வயதாகும். ஆனால் ஆவணத்தில் கண்ட விவரங்கள் சரியானது தான். வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்ட தேதியில் எனது தந்தை பி.யு.சி படித்துக் கொண்டிருப்பதாக சொன்னால் அது தவறாகும். வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட சொத்தை சுப்பையாநாயுடு தான் தன்னுடைய பணத்தை கொண்ட பிள்ளைகள் பெயரில் கிரையம் வாங்கியதாக சொன்னால் அது தவறாகும். வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி பார்த்தால் என்னுடைய தந்தை 1957ம் வருடத்தில் பிறந்ததாக தெரிகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.34 மற்றும் 35 ஆவணங்களில் ஷெனாய் நகர் சொத்து சுப்பையாநாயுடுவின் பிள்ளைகள் 4 பேர் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி பார்த்தால் வா.சா.ஆ.34 மற்றும் 35 ஆகிய ஆவணங்கள் ஏற்பட்ட சமயத்தில் என்னுடைய தந்தைக்கு 12 வயது என்றால் சரிதான். வா.சா.ஆ.34 மற்றும் 35 ஏற்பட்ட சமயத்தில் சுப்பையாநாயுடுவின் 4 பிள்ளைகளும் இளவர்கள் என்றால் தவறாகும். அந்த சமயத்தில் சுப்பபையாநாயுடுவின் 4 பிள்ளைகளுக்கும் எந்தவித வருமானங்களும் கிடையாது என்றால் தவறாகும். எல்லோரும் கூட்டுக் குடும்பமாக

இருந்ததாகவும், அதனால் பிள்ளைகளுக்கு சொத்த ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் சுப்பபையா நாயுடு தன்னுடைய பிள்ளைகள் பெயரில் சொத்துக்கள் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. சுப்பையா நாயுடு தன்னுடைய வாழ்நாளில் கந்தசாமி நாயுடு அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்துக்களை பயிர் செய்து வந்தாரா என்று எனக்கு தெரியாது. கந்தசாமி அறக்கட்டளையின் சொத்தக்களை சுப்பையாநாயுடு பயிர் செய்த வந்தது சம்பந்தமாக வழக்குகள் ஏற்பட்டு தற்போது அந்த வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்றாலும், அந்த சொத்துக்கள் அரசு சொத்தாட்சியரின் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றாலும் சரியல்ல. தாவா 'ஏ' பட்டிகை சொத்துக்களை ஒட்டி கந்தசாமி நாயுடு அறக்கட்டளைக்கு சொந்தமாக நிலங்கள் இருக்கிறது என்றால் சரிதான். கந்தசாமி நாயுடு அறக்கட்டளை நிலங்களை என்னுடைய பாட்டனார் விவசாயம் செய்த போது நான் பார்த்ததில்லை. விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தின் மூலம் பெறப்பட்ட வருமானம் மற்றும் கந்தசாமி நாயுடு அறக்கட்டளை சொத்துக்களை பயிரிட்டதின் மூலம் கிடைத்த வருமானம் ஆகியவற்றை கொண்டு தான் என்னுடைய தாத்தா சுப்பையா நாயுடு தன்னுடைய 4 பிள்ளைகள் பெயரில் சொத்துக்கள் கிரையம் வாங்கினார் என்றால் தவறாகும். ஏன் எனில் 12 வயது மற்றும் 17 வயதில் சொத்துக்களை கிரையம் வாங்குவதற்கு எவ்வித வருமானமும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா 'சி' பட்டிகை சொத்து 07/03/1980 தேதியில் கடனாக கிரையம் பெறப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். பி.சா.ஆ.32 ஆவணத்தின்படி ரூ.32,200/- அசலும் வட்டியுமாக சேர்த்து கொடுக்கப்பட்டு கடன் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தின் படி எனது தந்தைக்கு 01/04/1979 முதல் 01/04/1981 வரை மொத்த வருமானம் ரூ.7,200/- மட்டும் என்றாலும், அதனால் பி.சா.ஆ.32 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகை முழுவதையும் சுப்பையா நாயுடு தான் கொடுத்தார் என்றால் தவறாகும். சுப்பையா நாயுடு வருமான வரி கணக்கு காட்டும் நோக்கத்திற்காக சொத்தை கடனாக வாங்கியதாக குறிப்பிட்டுவிட்டு, பின்னிட்டு அந்த கடன் தொகையை சுப்பையாநாயுடு தான் கொடுத்து தீர்த்தார் என்றால் சரியல்ல. தாவா 'சி' பட்டியல் சொத்து வாங்கப்பட்ட சமயத்தில் நான் பிறக்கவில்லை என்றாலும் அந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். தாவா 'பி' பட்டிகை சொத்துக்களில் எங்களுக்கு சம்பந்தப்பட்ட சொத்துக்கள் குறித்த

அசல் ஆவணங்கள் எங்களிடம் இருக்கிறது. தாவா 'பி' பட்டிகை சொத்தக்களை எனது தந்தை அடமான கடன் வாங்கும் போது பைனான்சியரிடம் ஒப்படைத்து இருந்ததாகவும், அந்த கடனை திருப்பி செலுத்திவிட்டு அந்த ஆவணங்களை 2வது வாதி கோபால் திரும்ப பெற்று தன்னுடைய வசம் வைத்திருப்பதாக சொன்னால் சரியல்ல. தாவா 'பி' பட்டிகை சொத்துக்களை எனது தந்தை யாரிடமும் அடமானம் வைக்கவில்லை. வா.சா.ஆ.8 முதல் 13, 15, 18 முதல் 24, ஆகிய இன சொத்துக்கள் நான் பிறப்பதற்கு முன்னர் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.16, 17, 25 மற்றும் 26 ஆகிய ஆவணங்களில் கண்ட சொத்துக்கள் நான் பிறந்த பின்னர் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன கிரைய ஆவணங்களில் நான் சாட்சி கிடையாது. அந்த கிரைய ஆவணங்களில் கண்ட சொத்துக்கள் என்ன விலைக்கு கிரையம் பெறப்பட்டது என்று எனக்கு தெரியாது. மேற்சொன்ன கிரைய ஆவணங்களில் கண்ட சொத்துக்களுக்கான கிரைய தொகை யார் கொடுத்தார்கள் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். என் தந்தை பெயரில் கிரையம் வாங்கியிருக்கிற எந்த சொத்துக்களுக்கும் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் நான் சாட்சி கிடையாது என்றால் சரிதான். வாசா.ஆ.3, 34 மற்றும் 35 ஆகிய ஆவணங்களீல் கண்ட சொத்துக்களை சுப்பையாநாயுடுவின் 4 பிள்ளைகளும், தாவா 'பி' மற்றும் 'சி' பட்டிகை சொத்துக்களை எனது தந்தையும் பக்தவச்சலும், தாவா 'ஜி' பட்டியல் சொத்துக்களை எனது தந்தையும் கிரையம் வாங்கியதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. அவ்வாறு அந்த சொத்துக்களை கிரையம் பெறுவதற்கு அவர்களுக்கு எந்தவித வருவாயும் கிடையாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.35 ஆவணத்தில் சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டது சம்பந்தமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். பி.சா.ஆ.35 ஆவணம் என்னுடைய தந்தையால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.35 ஆவணத்தில் தாவா 'எப்' பட்டிகை சொத்தில் முதலீடு செய்யப்பட்டது குறித்து மட்டும் தான் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதே போன்று மற்ற சொத்துக்களில் என்னுடைய தந்தை மற்றும் பக்தவச்சலு ஆகியோர் முதலீடு செய்யப்பட்டது சம்பந்தமாக வேறு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தவறாகும். பி.சா.ஆ.36 ஆவணம் 31/03/1981 முடிய உள்ள காலத்திற்கான வருமான வரி தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அதில் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஓர்க்ஸ்

நிறுவனத்தின் நடப்பு கணக்கு விவரங்கள் இணைக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அந்த நடப்பு கணக்கு விவரத்தின்படி ஏற்கனவே ரூ.12,546.25 தொகை எனது தந்தை முதலீடு செய்திருக்கிறார். 01/04/1979 தேதியில் என்னுடைய தந்தை விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தில் எவ்வளவு தொகை முதலீடு செய்தார் என்பதற்கு ஆதாரங்கள் தாக்கல் செய்திருக்கிறேன். தாவா 'சி' பட்டியல் சொத்து கிரையம் பெறப்பட்டது குறித்து பி.சா.ஆ.36 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.36 மற்றும் 37 ஆவணங்களில் தாவா 'பி' மற்றும 'சி' பட்டியல் சொத்துக்களை கிரையம் வாங்கியது சம்பந்தமாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.37 ஆவணத்தில் தாவா 'எப்' பட்டிகை சொத்தை மான்சி மெர்க்கன்டைல் நிறுவனத்திடம் அடமான ஏற்படுத்தப்பட்டது குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்.